ஆகவே, வருகிற கால கட்டங்களில், single window system மூலமாக மேற்படி கல்லூரிகளில் மாணவர்கள் சேர்வதற்கு வாய்ப்பும் இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட ஒரு நிலை வரும்போது, மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறபொழுது, விண்ணப்பங்கள் அதிகமாக வருகிறபொழுது, அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 255, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

255—

நியாய விலைக் கடை

__2906__—திரு. டி. செங்குட்டுவன்:

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, யூ.புரம் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி தொகுதி, யூ.புரம் தாய்க் கடையில் மொத்தம் 682 குடும்ப அட்டைகள் உள்ளன. மலைப் பிரதேச பகுதியான யூ.புரத்தில் அரசாணையின்படி நிபந்தனைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில், யூ.புரம் பகுதிநேர நியாய விலைக் கடை 30–4–2012 அன்று மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, 243 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகின்றது என்பதனை இந்த அவைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 256, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

256—

பாசன வாய்க்கால்

*849—**திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, சாத்தனூர் அணைக்கட்டிலிருந்து உளுந்தூர்பேட்டைக்கு பாசன வாய்க்கால் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

உளுந்தூர்பேட்டை தொகுதி, சாத்தனூர் அணைக்கட்டிலிருந்து உளுந்தூர்பேட்டை பாசனத்திற்கு பாசன வாய்க்கால் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று கேள்வி எழுப்பியுள்ளார். அதற்கான தல ஆய்வு செய்து, தொழில்நுட்ப ரீதியாக வாய்க்காலின் தரைமட்ட அளவு மற்றும் பாசன நிலங்களின் மட்ட அளவுகள் ஆகியவற்றை ஆய்வு செய்து, பாசன வாய்க்கால் அமைக்க சாத்தியக்கூறு உள்ளதா என்பது குறித்து ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட பிறகு, உளுந்தூர்பேட்டை பாசனத்திற்கு பாசன வாய்க்கால் அமைப்பது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.*

திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் நலனுக்காக வேளாண்மைத் துறையில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி, உழவர் பெருவிழா கண்ட, உலகம் போற்றும் எங்கள் குலதெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*